[8th November 1966

திரு. எ. கோ. பாலகிருஷ்ணன் : தலைவர் அவர்களே, அந்த கிராமத்திற்கு 'இளம்பிள்ளை' என்று பெயர் வரக் காரணம் என்ன என்று அறியலாமா ?

கனம் சபாநாயகர் : அதை அங்கே போய்க் கேட்கவேண்டும்.

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் : யாராவது புலவர் இருந்தால் சொல்லலாம்.

தீப்பெட்டித் தொழிற்சாலை

* 505 கேள்வி.—**திரு. எம். எஸ். செல்வராஜன் :** கனம் கைத் தொழில் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) சிவகாசி சேம்பர் ஆப் மேட்ச் இன்டஸ்ட்ரீசிலிருந்து 2—9—1965 தேதியிட்ட முறையீடு வந்ததா ?

(இ) அம்முறையீட்டில் என்னென்ன கோரிக்கைகள் அடங்கியிருந்தன ?

(உ) அம்முறையீட்டின் மீது எடுத்துக் கொள்ளப்பட்ட நடவடிக்கை யாது ?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் (அ) முதல் (உ) வரை சபையில் ஒரு விவர அறிக்கை சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.

திரு. எம். எஸ். செல்வராஜன் : சார், நம்முடைய ராச்சியத்தின் தீப்பெட்டி தொழில் அபிவிருத்திக்காக, அதற்கு வேண்டிய கெமிகல்கள் எல்லாவற்றையும் தயார் செய்ய தொழில் கூட்டுறவு ஸ்தாபனம் நிறுவப்பட இருக்கிறதா, அதற்கான ஏற்பாடுகள் எந்த நிலையில் இருக்கின்றன என்று அறிவிக்க முடியுமா ?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் : கனம் சபாநாயகர் அவர்களே, இந்தக் கேள்வி எக்ஸைஸ் ட்யூடி பற்றியும், மேச் டாக்ஸ் பற்றியும் ஆனது. அதிலிருந்து இந்த உப கேள்வி எழாது என்று கூற விரும்புகிறேன்.

Servicing Corporation

* 506 *Q.*—**Sri V. SANKARAN :** Will the Hon. the Minister for Industries be pleased to state the action taken and the procedure followed for the equitable distribution of the raw materials procured by the Servicing Corporations in the State, to the bona fide industries in dire need?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் : சபைமுன் விவர அறிக்கை [b] ஒன்று வைக்கப்பட்டுள்ளது.

திரு. து. ப. அழகமுத்து : தலைவர் அவர்களே, இந்த அறிக்கையில் சர்வீசிங் கார்ப்பொரேஷன் மூலப் பொருள்கள் எப்படி வினியோகம் செய்யப்படுகின்றன என்று குறிப்பிட்டிருக்

---

a Printed as Appendix VII on page 726–727.

b 727–721-ம் பக்கங்களில் எட்டாவது இணைப்பாக அச்சிடப்பட்டுள்ளது.